# ACCOUNTING UNIT MODEL EXAM 03

UNIT EXAM NO :- 03/A/L/2020

| 33 | T | I |
|---|---|---|

**தேர்ச்சி 05 – கணக்கீட்டு எண்ணக்கரு,**

*BY :- Mr V.S.ThiruKumaran B.Com (Acc) Spl*
J/ VAYAVILAN CENTRAL COLLEGE (M.NO 0776158080 . VIBER NO 0779109623 )

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 2020 ஆகஸ்ட்**
**General Certificate of Education (Adv.Level) Examination, August 2020**

## Accounting I
## கணக்கீடு I

A/L 2020
அலகு மாதிரிப் பரீட்சை

இல 03

**13.05.2020**

2.00 மணி

Accounting Unit

**பகுதி I**

Q1) ஒரு வருடத்தில் கொள்வனவு செய்த சரக்கின் கிரயத்தின் ஒரு பகுதியை விற்றசரக்கின்கொள்விலையாகவும் (செலவினம்) மிகுதியை இருப்பாகவும் (சொத்து) இனம்காண்பதற்கு அடிப்படையாக அமையும் கணக்கீட்டு எண்ணக்கரு

1) தொடர்ந்து செல்லல் 2) வரலாற்றுக்கிரயம் 3) இணைத்தல்
4) தேறல் 5) நிலுவை (அட்டுறு)

Q2) வியாபாரமொன்று கணக்குப்புத்தகங்களில் பணவீக்கநிலைமைகள் கவனத்தில்கொள்ளாது இதன் சொத்துக்களை ஒரேவிலையிலேயே காட்டுவதற்கு சிபார்சு செய்யும் கணக்கீட்டு எண்ணக்கரு எது?

1. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு
2. தொடர்ந்து செல் எண்ணக்கரு
3. நிலுவை
4. பணமதிப்பீடு
5. கால எண்ணக்கரு

Q3) வியாபாரமொன்றின் நன்மதிப்பு கணக்கேடுகளில் பதிவுசெய்யப்படுவதன் மூலம் மீறப்படும் கணக்கீட்டு எண்ணக்கரு

1. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு
2. தொடர்ந்து செல் எண்ணக்கரு
3. நிலுவை எண்ணக்கரு
4. பணஅளவீட்டு எண்ணக்கரு
5. கால எண்ணக்கரு

Q4) நிறுவனமொன்றின் கடன்பட்டடோரையும் கடன்கொடுநரையும் முறையே சொத்தாகவும் பொறுப்பாகவும் இனம்கான வகைசெய்யும் எண்ணக்கரு எது?
1. தேறல் எண்ணக்கரு
2. தொடர்ந்து செல் எண்ணக்கரு
3. நிலுவை எண்ணக்கரு
4. பணஅளவீட்டு எண்ணக்கரு
5. இணைத்தல் எண்ணக்கரு

Q5) வியாபாரமொன்று கணக்குப்புத்தகங்களில் பெருமளவு உண்மைப்பெறுமானத்தை பெறும்பொருட்டு இதன் சொத்துக்களை அதன் நடைமுறைவிலையில் பெறுமதியிட சிபார்சு செய்தது இப்பிரேரனை எக் கணக்கீட்டு எண்ணக்கருவை மீறுகின்றது.
1. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு
2. தொடர்ந்து செல் எண்ணக்கரு
3. நிலுவை
4. பணமதிப்பீடு
5. கால எண்ணக்கரு

Q6) வருமானக்கூற்றில் ஒவ்வொரு காலத்திற்குமான பெறுமானத்தேய்வை இனம்கானும் எண்ணக்கரு எது?
1. அட்டுறு 2. தொடாந்து இயங்குதல்
3. இணைத்தல் 4. தேறல் 5. முன்னெச்சரிக்கை

**Q7**) வாடிக்கையாளருக்கு பொருட்களை விநியோகிக்கம் நேரத்தில் அதனை விற்பனை வருவாயாக வருமானக்கூற்றில் இனம் காண்பதற்கான அடிப்படையை வழங்கம் கணக்கீட்டு எண்ணக்கரு எது?
1. அட்டுறு 2. இணைத்தல்
3. கணக்கீட்டு காலம் 4. முன்னெச்சரிக்கை 5. தேறல்

Q8) இருப்புக்களின் கிரயம் குறைவாக காணப்பட்டபோதும் அதன் சந்தை விலையில் இருப்பு மதிப்பிடப்படின் மீறப்பட்ட எண்ணக்கரு எது? (……..)

1) **பாதுகாப்பு எண்ணக்கரு**
2) **அலகுசார் எண்ணக்கரு**
3) **பொருண்மை எண்ணக்கரு**
4) **அட்டுறு எண்ணக்கரு**
5) **பண அளவீட்டு எண்ணக்கரு**

Q9) சுரங்கத்தொழில் முயற்சியில் ஈடுபடும் ஒருவர் அம் முயற்சி நிறைவடையும் வரை அதன் பெறுபேற்றை மதிப்பிடவில்லை. இது எவ் எண்ணக்கருவை மீறுவதாகும் (……..)
1) **பாதுகாப்பு எண்ணக்கரு**
2) **அலகுசார் எண்ணக்கரு**
3) **வரலாற்றுக்கிரய எண்ணக்கரு**
4) **தொடந்து செல் எண்ணக்கரு**
5) **கால எண்ணக்கரு**

Q10) குத்தகையின் கிழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்து அதன் இறுதிக்கொடுப்பனவு செய்யமுன்னர் சொத்தாக காட்டப்பட்டது இது எவ் எண்ணக்கருவின் அடிப்படையிலாகும். (……..)
1) **பாதுகாப்பு எண்ணக்கரு**
2) **நோக்கமான எண்ணக்கரு**
3) **தோற்றத்தைகாட்டிலும் கருத்து முக்கியத்துவம்**
4) **தொடந்து செல் எண்ணக்கரு**
5) **அலகுசார் எண்ணக்கரு**

Accounting Unit Exam 03

Q11) ஆண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 500000 விற்பனை தொடர்பில் வழங்கப்பட்ட உத்தரவாதம் சார்பாக 2% கணக்கேடுகளில் செலவினமாக ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தும் கணக்கீட்டு எண்ணக்கரு எது? (.........)

1) **கிரய எண்ணக்கரு**
2) **கால எண்ணக்கரு**
3) **பொருத்தம் செய் எண்ணக்கரு**
4) **தேறல் எண்ணக்கரு**
5) **பாதுகாப்பு எண்ணக்கரு**

Q12) பின்வரும் நடவடிக்கையும் கணக்கீட்டு எண்ணக்கருவும் தரப்பட்டுள்ளது இதனை ஒழுங்காக வெளிப்படுத்தும் சரியான தொடர் எது? (.........)

**நடவடிக்கை**
1) இருப்பை குறைந்த பெறுமதியில் கணக்கேடுகளில் எடுத்தல்.
2) நடைமுறை,நடைமுறையல்லாச்சொத்து என வகைப்படுத்தல்
3) குத்தகை ஆதனத்தை சொத்தாக காட்டல்
4) கடன்பட்டோர் கடன்கொடுநரை நிதிநிலைமைக்கூற்றில் சொத்தாவும், பொறுப்பாகவும் காட்டல்.
5) நிதிக்கூற்றுக்கள் ரூபாக்களில் வெளிப்படத்தல்.

**எண்ணக்கரு**
A அமைப்பின் மேலான சாரம்
B பணஅளவீட்டுஎண்ணக்கரு
C முன்னெச்சரிக்கை எண்ணக்கரு
D தொடந்து செல்லல் எண்ணக்கரு
E அட்டுறு எண்ணக்கரு

1) CDEAB 2) CEDAB 3) CDAEB
4) CADEB 5) ACEDB

- 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேவிபாலா நிறுவனத்தின் தேறியலாபம் ரூ 41800 ஆகும் இவர் பின்வரும் கணக்கீட்டு நடைமுறைதொடர்பில் சந்தேகங்களை வெளியிட்டுள்ளார்.

A) தனது மனைவியின் வைத்தியசாலைக்கு எடுக்கப்பட்ட ரூ 2000 பெறுமதியான பால்மா பெட்டிக்குரிய பதிவினை ஏடுகளில் மேற்கொள்ளவில்லை.

B) இருப்பின் கிரயப்பெறுமதியைவிட அவற்றின் சந்தைப்பெறுமதி ரூ 2400 ஆல் குறைவாகவுள்ளபோதும் இருப்புக்கள் கிரயப்பெறுமதியிலேயே கணக்குகளுக்கு எடுக்கப்பட்டது.

C) 1.7.2019 இல் செய்யப்பட்ட 5000 மோட்டார் பழுதுபார்த்தல் செலவு மோட்டார்வாகனக்கணக்கிற்கு வரவிடப்பட்டது மோட்டாருக்கு 10% தேய்விடப்படுகின்றது.

D) நிதியாண்டில் ரூ 500 க்கு கொள்வனவுசெய்யப்பட் எழுதுகருவி ஐந்தாண்டுகளுக்கு பதிவளிக்கப்படும் என்றஅடிப்படையில் இவ்வாண்டுக்குரியது இலாபநட்டக்கணக்கில் தாக்கல்செய்யப்பட்டது.

**13ம் 14ம் வினாக்களுக்கு விடைதருக.**

Q13) மேற்படி விடையங்கள் சீராக்கப்பட்டபின்வுள்ள தேறியலாபம் யாது? (........)

1) ரூ 31500 2) ரூ 36500 3) ரூ 31375 4) ரூ 41375 5) ரூ 36375

Accounting Unit Exam 03

Q14) ABCD சீராக்கங்களுக்கு அடிப்படையாக அமையும் கணக்கீட்டு எண்ணக்கருவின் சரியானதொடர் எது? (......)

1) **பாதுகாப்புஎண்ணக்கரு, அலகுசார் எண்ணக்கரு, பொருண்மை எண்ணக்கரு, இணைத்தல் எண்ணக்கரு**
2) **அலகுசார் எண்ணக்கரு, பாதுகாப்புஎண்ணக்கரு, இணைத்தல் எண்ணக்கரு பொருண்மை எண்ணக்கரு,**
3) **பணஅளவீட்டுஎண்ணக்கரு, அலகுசார் எண்ணக்கரு, பொருண்மை எண்ணக்கரு, பாதுகாப்பு எண்ணக்கரு**
4) **அலகுசார் எண்ணக்கரு, கிரய எண்ணக்கரு, பாதுகாப்புஎண்ணக்கரு பொருண்மை எண்ணக்கரு,**
5) **அலகுசார்எண்ணக்கரு, கிரய எண்ணக்கரு பணஅளவீட்டு எண்ணக்கரு, பொருண்மை எண்ணக்கரு**

Q15) ரூபன் நிறுவனத்தின் நிதிகூற்றில் 31.3.2020 முடிவடைந்த காலப்பகுதி என தலைப்பிட்டதுடன், சொத்துப்பொறுப்பு நடைமுறை, நடைமுறையல்லாதது என வகைப்படுத்தப்பட்டு காட்டப்பட்டதுடன், செலவினங்கள் மூலதனச் செலவு, வருமானச் செலவு என வேறாக்கப்பட்டிருந்தன இக் கூற்றில் முறையே வெளிப்படுத்தப்படுத்தப்படும் எண்ணக்கருச் சேர்வைகள் எவை? (........)

1) **காலஎண்ணக்கரு, தொடந்துசெல் எண்ணக்கரு, பாதுகாப்பு எண்ணக்கரு**
2) **காலஎண்ணக்கரு, இணைத்தல் எண்ணக்கரு, தொடந்துசெல் எண்ணக்கரு**
3) **பாதுகாப்புஎண்ணக்கரு, இணைத்தல் எண்ணக்கரு, அட்டுறு எண்ணக்கரு**
4) **காலஎண்ணக்கரு, செயற்படு அமைப்பு எண்ணக்கரு, அட்டுறு எண்ணக்கரு**
5) **காலஎண்ணக்கரு, தொடர்ந்து செல்எண்ணக்கரு, இணைத்தல் எண்ணக்கரு**

Q16) நாதன் கம்பனி பின்பற்றிய எண்ணக்கரு முறையே தோற்றத்தை காட்டிலும் மேலான சாரம், தேறல் எண்ணக்கரு, பாதுகாப்பு எண்ணக்கரு இதனை முறையாக வெளிப்படுத்தம் கூற்றுக்கள் எவை? (........)

1) **உரிமையாளர் பண்டங்களை பற்றியதுடன், குத்தகை ஆதனத்தை சொத்தாக காட்டி சொத்துக்களுக்கு பெறுமாத்தேய்வு செய்தார்.**
2) **இருப்புக்களின் குறைந்த பெறுமதியில் இருப்பாக எடுத்து, சொத்துக்கு பெறுமானத்தேய்வு செய்து விற்பனை செய்க இன்றேல் திரும்பல் சீராக்கப்படல்,**
3) **குத்தகை ஆதனத்தை சொத்தாக பதிவு செய்து, பெறுமானத்தேய்வு இட்டு பற்றுக்களை பதிவு செய்தல்,**
4) **குத்தகை ஆதனத்தை சொத்தாக பதிவு செய்து, கடன் விற்பனை முழுவதையும் வருமானமா காட்டியதுடன், இருப்புக்களை குறைந்த பெறுமதியில் எடுத்துள்ளார்.**
5) **இருப்புக்களின் குறைந்த பெறுமதியில் இருப்பாக எடுத்து, விற்பனை செய்க இன்றேல் திரும்பல் சீராக்கப்பட்டு சொத்துக்கு பெறுமானத்தேய்வு செய்துள்ளார்.**

Q17) பின்வரும் நடவடிக்கையும் கணக்கீட்டு எண்ணக்கருவும் தரப்பட்டுள்ளது இதனை ஒழுங்காக வெளிப்படுத்தும் சரியான தொடர் எது? (..........)

**நடவடிக்கை**

1) ஏற்பாடுகளை செலவாக கருதி பதிதல்
2) நடைமுறையல்லாச் சொத்துக்குரிய தேய்வை செலவாக இனம்காணல்
3) குத்தகை ஆதனத்தை சொத்தாக காட்டல்
4) வருமதி வருமானங்களையும் முற்பன செலவுகளை சீராக்கல்
5) நிதியறிக்கையில் நிறுவனபெயரை தலைப்பிடல்

**எண்ணக்கரு**

A சட்டமுரன்
B இனைதல் எண்ணக்கரு
C பாதுகாப்பு எண்ணக்கரு
D அலகுசார் எண்ணக்கரு
E அட்டுறு எண்ணக்கரு

1) ECADB 2) CBAED 3) BCAED 4) CADEB 5) ACEDB

Accounting Unit Exam03

Q18) நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டை அடிப்படையில் தயாரிக்கப்படவேண்டும் எனவலியுறுத்தும் எண்ணக்கரு எது? (..)

1) **நாணயஉறுதித் தன்மை எண்ணக்கரு**
2) **தொடர்ந்துசெல் எண்ணக்கரு**
3) **இணைத்தல் எண்ணக்கரு**
4) **கால எண்ணக்கரு.**
5) **பாதுகாப்பு எண்ணக்கரு**

Q19) நிதிக்கூற்றுக்களுக்கு குறிப்புக்களை வலியுறுத்தும் எண்ணக்கரு எது ? (........)

1) **கிரய எண்ணக்கரு**
2) **வெளிப்படுத்தல் எண்ணக்கரு**
3) **அலகுசார் எண்ணக்கரு**
4) **இணைத்தல் எண்ணக்கரு**
5) **கால எண்ணக்கரு**

Q20) நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு இடுவதற்கு அடிப்படையாக அமையும் எண்ணக்கரு எது? (.........)

1) **அட்டுறு எண்ணக்கரு**
2) **தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு**
3) **தேறல் எண்ணக்கரு**
4) **அலகுசார் எண்ணக்கரு**
5) **கால எண்ணக்கரு**

## 21-25 வரையான வினாக்களு விடை தருக

கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

Q21) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொடர்புபடும் மிக பொருத்தமான எண்ணக்கரு.

**A** – ஒன்றுக்கு மேற்பட்ட வருடங்களுக்கு பயன்படக்கூடிய சிறுகருவி வருமானக்கூற்றில் செலவாக காட்டப்பட்டது.
**B** – நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது கம்பனியின் வாழ்க்கை காலம் 12 மாதங்கலாக பிரிக்கப்படும்.
**C**- கம்பனியின நிதிக்கூற்றுக்களில் பணவீக்க சீராக்கம் செய்யப்படுவதில்லை.
**D** – ஏற்படக்கூடிய சாத்தியமான உத்தரவாத கோரிக்கை தொடர்பில் ஏற்பாடு ஒன்று செய்யப்படல்.

| விடயம் | எண்ணன்கரு |
|---|---|
| A | ............................................. |
| B | ............................................. |
| C | ............................................. |
| D | ............................................. |

Accounting Unit Exam 03

Q22) வயைறுத்த ராம்கி பொதுக்கம்பனி ..................... A

31.3.2017 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான முற்றுமடங்கிய வருமானக்கூற்று ................................................ B

ரூ 000 ................................................... C

கடன்விற்பனை xxx
விற்பனைக் கிரயம் ( xxx )  } .............................. D
பெறுமானத்தேய்வு (xxx)
கணக்கீட்டு எண்ணக்கரு

A - ...........................................................
B - ..........................................................
C - ..........................................................
D- ...........................................................

Q23) கணக்கீட்டுச்சட்டத்தினால் வரையறை செய்யும் அடிப்படை கணக்கீட்டு எண்ணக்கரு எது?

.....................................................................................................
.....................................................................................................

Q24) வரலாற்று கிரய எண்ணக்கரு மீறப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக?

.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................

Q25) 2020 மே இடம்பெறவுள்ள கருத்தரங்கு நிகழ்வுக்காக கல்வி அமைச்சு மாநாட்டு மண்டபம் ஒன்றை சாம்கோ றென்ரேர்ஸ் இடமிருந்து மாதம் ஒன்றிற்கு ரூ 500000 இற்கு வாடகைக்கு பெற்றது மேமாத் முழுவதும் மண்டபம் முழுமையாக பயன்படுத்தப்பட்டது அதற்கான கொடுப்பனவு பின்வருமாறு இடம்பெற்றது.

05.04.2020 இல் பதிவு செய்யும் போது ரூ250000
31.5.2020 இல் கருத்தரங்கு நிறைவின்போது ரூ 200000
05.6.2020 இல் மீதித்தொகை ரூ 50000

அ) மே மாதத்திற்குரிய சாம்கோ றென்ரேர்ஸின் வருமானம் யாது?

.....................................................................................................

ஆ) இது எவ் எண்ணக்கருவின் அடிப்படையிலாகும்?

.....................................................................................................

Accounting Unit Exam 03